செய்தி வெளியீடு எண். 06-2017 நாள்: 02.10.2017

# விழுப்புரம் மாவட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பாக தூய்மை மற்றும் சுகாதாரம் ஆகியவை குறித்து, அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற்ற கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் குறும்படம் தயாரித்தல் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

*****

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பாக தூய்மை மற்றும் சுகாதாரம் ஆகியவை குறித்து, அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற்ற கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் குறும்படம் தயாரித்தல் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.10.2017) பரிசுகளை வழங்கினார்.

தூய்மையே சேவை எனும் தாரக மந்திரத்தின் மூலம் 15.09.2017 முதல் 02.10.2017 வரை மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிகளிலும் உள்ள பொது இடங்கள், பள்ளிகள், கோயில்கள் மற்றும் சுற்றுலா தளங்கள் ஆகிய இடங்களில் அனைத்துத் தர மக்களையும் மாவட்ட நிர்வாம் ஒன்றிணைத்து தூய்மை பணி மேற்கொண்டது.

தூய்மை மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை வலியுறுத்தும் விதமாக அனைத்து ஊராட்சிகளிலும் கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் குறும்படம் தயாரித்தல் ஆகிய போட்டிகள் 08.09.2017 அன்று நடத்தப்பட்டது.

இதில் வெற்றிபெற்ற முதல் மூன்று நபர்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இவ்விழாவில், மாணவ, மாணவியர், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு தூய்மை மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், விழுப்புரம் மாவட்டத்தை திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற மாவட்டமாக 28.02.2018க்குள் முற்றிலுமாக முடித்திட முனைப்புடன் செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மகேந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஆஞ்சலோ இருதயசாமி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.ஜெமினி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.